# ஜோலார்பேட்டை நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

2023-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி (**28.04.2023**) வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

குறள் எண்.74 "அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு"

(அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அது எல்லாரிடத்தும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.)

**பொருள்கள்**

1) **கீழ் குறிப்பிட்ட நகராட்சி அலுவலர்களின் நாட்குறிப்புகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

அ) ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2023ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.

ஆ) ஜோலார்பேட்டை நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களின் மார்ச் 2023ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.

2) ஜோலார்பேட்டை நகராட்சியில் மார்ச் 2023ஆம் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு 6 பதிவு மற்றும் இறப்பு பதிவு 12 ஆகும்

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

3) ஜோலார்பேட்டை நகராட்சியின் மார்ச்-2023 மாதத்திற்கான வரவு செலவு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Service Name | No of Transactions | No of Acknowledgement | No of Receipts | Receipt Amount (Rs) |
|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F |
| **Service Type Name :** Application | | | | | |
| **Service Category Name :** Birth and death | | | | | |
| 1 | Request for Death NAC | 3 | 0 | 3 | 300 |
| | **Service Category wise Total :** | **3** | **0** | **3** | **300** |
| **Service Category Name :** Property Tax | | | | | |
| 2 | Name Transfer of Property | 40 | 40 | 0 | 0 |
| 3 | New Assessment of Property | 7 | 7 | 0 | 0 |
| 4 | Vacant Land | 15 | 15 | 0 | 0 |
| | **Service Category wise Total :** | **62** | **62** | **0** | **0** |
| **Service Category Name :** Receipts | | | | | |
| 5 | Payment of Professional Tax | 106 | 0 | 106 | 336173 |
| 6 | Payment of Property Tax | 1578 | 0 | 1578 | 1626219 |
| 7 | Payment of Water Supply | 387 | 0 | 387 | 416642 |
| 8 | Payment of WS Deposit | 36 | 0 | 36 | 64557 |
| 9 | Rental Collection | 52 | 0 | 52 | 550227 |
| | **Service Category wise Total :** | **2159** | **0** | **2159** | **2993818** |
| | **Service Type wise Total :** | **2224** | **62** | **2162** | **2994118** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Service Type Name :** Receipt | | | | | |
| **Service Category Name :** Miscellaneous Receipts | | | | | |
| 10 | Amma Unavagam | 21 | 0 | 21 | 39931 |
| 11 | Application Charges | 4 | 0 | 4 | 960 |
| 12 | CRS- LATE FEE FOR BIRTH REGISTRATION | 1 | 0 | 1 | 500 |
| 13 | Deposit | 11 | 0 | 11 | 211910 |
| 14 | Other Income | 27 | 0 | 27 | 22360 |
| 15 | Registration Fees | 1 | 0 | 1 | 10000 |
| | **Service Category wise Total :** | **65** | **0** | **65** | **285661** |
| | **Service Type wise Total :** | **65** | **0** | **65** | **285661** |
| | **Grand Total :** | **2289** | **62** | **2227** | **3279779** |
| | | | | **SFC** | **10318185** |
| | | | | **TOTAL RECEIPT** | **13597964** |

MARCH 2023 EXPENDITURE

| | | |
|---|---|---|
| 2101001 | PAY | 1320139 |
| 2101002 | GRADE PAY | 0 |
| 2101004 | DEARNESS ALLOWANCE | 501653 |
| 2101005 | HOUSE RENT ALLOWANCE | 67025 |
| 2101006 | CITY COMP. ALLOWANCE | 0 |
| 2101007 | MEDICAL ALLOWANCE | 13039 |
| 2101008 | OTHER ALLOWANCE | 5000 |
| 2102004 | SUPPLY OF UNIFORMS | 15040 |
| 2102019 | CONVEYANCE ALLOWANCE | 2476 |
| 2102020 | WASHING ALLOWANCE | 4493 |
| 2103005 | PENSIONS CONTRIBUTION TO MUNICIPAL EMPLOYEES | 476906 |
| 2201201 | TELEPHONE CHARGES | 106039 |
| 2202101 | STATIONERY AND PRINTING | 667424 |
| 2205203 | OTHER PROFESSIONAL CHARGES | 6000 |
| 2208003 | OTHER EXPENESE | 2990 |
| 2208004 | SITTING FEES COUNCILORS | 10800 |
| 2303002 | DIESEL | 123399 |
| 2303003 | OIL / LUBRICANTS | 17286 |
| 2303005 | SANITARY MATERIALS | 545375 |
| 2304002 | HIRE CHARGES FOR MACHINERIES/ EQUIPMENTS | 283435 |
| 2305007 | MAINTENANCE EXPENSES FOR STREET LIGHTS | 177384 |
| 2305301 | Light Vehicles - Maintenance | 19876 |
| 2305906 | REPAIRS AND MAINTENANCE - COMPUTERS | 198015 |
| 2308009 | GARBAGE CLEARANCE | 1112372 |
| 2308019 | AMMA UNAVAGAM | 171720 |
| 2308021 | Anti Filaria / Anti Malaria Operations | 209520 |
| 2602006 | MUNICIPAL CONTRIBUTION | 191782 |
| | **Total** | **6249188** |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

4) ஜோலார்பேட்டை நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்புவாகனங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்டுள்ள வாகனம் இதர வாகனங்களின் காப்பீடு, சாலை வரி (Road Tax) மற்றும் தகுதிசான்று ஆகிய பணிகளுக்கு **2023-2024ம்** ஆண்டிற்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்ற நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வாகன எண் | வாகனத்தின் விவரம் | வ. எண் | வாகன எண் | வாகனத்தின் விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | TN-23 BP2497 | ஈப்பு வாகனம் | 7 | TN-23 AT1076 | டிப்பர் லாரி |
| 2 | TN-23 BM4493 | ஈப்பு வாகனம் | 8 | TN-83 B0657 | டாடா ஏஸ் வாகனம் |
| 3 | TN-23 BR8739 | டம்பர் பிளேசர் | 9 | TN-83 B0604 | டாடா ஏஸ் வாகனம் |
| 4 | TN-23 BL0870 | டாடா ஏஸ் வாகனம் | 10 | TN-23 BL5248 | டாடா ஏஸ் வாகனம் (நாய் வண்டி) |
| 5 | TN-23 AY6679 | டிராக்டர் வாகனம் | 11 | TN-83 MB 4320 | ஈப்பு வாகனம் |
| 6 | TN-23 AY6680 | டிரைலர் வாகனம் | | | |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி **2023-2024ம்** ஆண்டிற்கான வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.650/2016/எச்1

5) ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர தொற்றுகள் வராமல் தடுக்க மகளிர் சுய உதவி குழு மூலமாக 20 பணியாளர்கள் கொண்டு DBC பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஒ.மு.எண்.13433/2018/ஜே1 நாள்.17.09.2018ல் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC Workers) ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் அந்தந்த நகராட்சிகள் நிர்வாக அனுமதி வரம்புக்குட்பட்டு பணியமர்த்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியில் 300 குடியிருப்புகளுக்கு ஒரு நபர் என்ற விகிதத்தில் 8150 குடியிருப்புகளுக்கு 24 பணியாளர்கள் தேவைப்படுவதால் இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் மேற்கொள்ள 24 பணியாளர்களை தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ள 24.09.2020ல் அருணை கம்ப்பீட்டர் பார்ம்ஸ், வாணியம்பாடி என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி நகரமன்ற தீர்மான எண்.121 நாள்.29.10.2020ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு 01.11.2020 முதல் 31.10.2021 வரை ஒரு ஆண்டிற்கு பணிகள் செய்ய அருணை கம்ப்பியூட்டர் பார்ம்ஸ், வாணியம்பாடி என்ற நிறுவனத்திற்கு 29.10.2021 பணி உத்தரவு வழங்கப்பட்டு டெங்கு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.03.2023 முடிவடைவதால், தற்போது கோடை காலம் என்பதால் 24 DBC பணியாளர்களை தனியார் பணியாளர்கள் ஒப்பந்தாரர் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் என்ற நிறுவனம் மூலம் 15.04.2023 வரை மட்டும் பணிகள் செய்திட 15 நாட்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்யவும் மற்றும் இப்பணிக்குண்டான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 15.04.2023 வரை ஏற்கெனவே பணிகள் செய்து வரும் மேற்படி நிறுவனத்திற்கு 15 நாட்களுக்கு மட்டும பணி நீட்டிப்பு செய்து பணி ஆணை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.907/2018/எச்1

6) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3088/2022/தூ.இதி நாள்.23.02.2023 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3031/2022/ஆ3 நாள்.09.03.2023 ஆகியோரின் கடிதத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்கும் குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் செழிப்பு என்ற ஒரே விற்பனை பெயர் மூலம் விற்பனை செய்யவும், உரத்தின் உற்பத்தி விலை கிலோ ரூ.20/- என்ற அடிப்படையில் வைத்து விற்பனை விலையை நிர்ணயம் செய்வதற்காக நகரமன்றத்தின் ஒப்புதல் பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென அறிவுரைகள் வழங்கப்படுள்ளது. எனவே, இந்நகராட்சியில் தயாரிக்கப்படும் இயற்கை உரம் செழிப்பு என்ற விற்பனை பெயரில் ஒரு கிலோ இயற்கை உரம் விலை ரூ.20/- என நிர்ணயம் செய்து விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.485/2023/எச்1

7) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் உட்கோட்ட நிர்வாக நடுவர் (4) வருவாய் கோட்டாட்சியர் செயல் முறைகள் ந.க.எண்.ப.வெ.அ3/05/2023 நாள்.04.02.2023 இதன்படி 06.02.2023 முதல் 24.02.2023 வரை நடைபெறவுள்ள "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான(2022-23) பல்வேறு விளையாட்டு போட்டிகள் ஜோலார்பேட்டை நகரபகுதியில் உள்ள அரசு மினி ஸ்டேடியத்தில் நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பணியான சாமியான பந்தல், வாகன நிறுத்தம், தற்காலிக உணவகம் மற்றும் 500 நாற்காலிகள் அடங்கிய இருக்கை அமைப்புகளுக்கு உள்ளூர் விலைவிகிதத்தை பெற்று பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய மதிப்பீடு ரூ.30.000/ க்கும் நகரமன்ற தீர்மான எண்.262 நாள்.09,02,2023 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த M.சம்பத் சவுண்ட் சிஸ்டம் என்பவர் மூலம் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் இரண்டு நாட்களுக்கு பதிலாக விளையாட்டு போட்டிகள் நடைபெறும் எல்லா நாட்களுக்கும் சேர், பந்தல் அமைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. அதன்படி போட்டி நடைபெற்ற அனைத்து நாட்களிலும் சேர் மற்றும் பந்தல் அமைக்கப்பட்டதற்கு உண்டான மொத்த செலவீனம் தொகை ரூ.1,40,000/ஆகும். கூடுதல் செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்குண்டான செலவினத்தை வருவாய் நிதி 2023-2024ல் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2020/2022/இ1

8) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 09 அவர்களின் செய்தி வெளியீடு எண்.731 நாள்.18.04.2023ன், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1988-க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விதிகள் 2023, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1988 பிரிவு 84 (1)-இல், சொத்து உரிமையாளர் 2023-24 ஆம் ஆண்டிற்கு முதலாம் அரையாண்டிற்கு சொத்து வரி 30.042023-க்குள் செலுத்துவோருக்கு 5% ஊக்கத்தொகை (தள்ளுபடி) பெற தகுதியுடையவர்கள் ஆகிறார். எனவே, ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் குடியிருப்பு மற்றும் வணிகப் பயன்பாடு கட்டிடங்கள் சொத்து வரி முதலாம் அரையாண்டிற்கு 30.04.2023-க்குள் செலுத்துவோருக்கு 5% தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விவரத்தை ஆட்டோ ஒலிபெருக்கி, ப்ளெக்ஸ் பேனர், அறிவிப்பு நோட்டீஸ் (10,000 எண்ணிக்கை) அச்சு அடித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உண்டாகும் தோராய செலவினம் ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பேனர்கள், நோட்டீஸ்கள் மற்றும் ஆட்டோ விளம்பரங்கள் செய்ய விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. விழிப்புணர்வு அறிவிப்பு நோட்டீஸ் (10,000 எண்ணிக்கை) WEPCO, வேலூர் அவர்கள் மூலம் அச்சடித்து வாங்கிக் கொள்ள மன்றம அனுமதிக்கலாம்.

9) ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.06 குடியானகுப்பம் பகுதியில் நெடுஞ்சாலை துறை சாலை கி.மீ.1/2ல் இரயில்வே கி.மீ.218/500-600ல் ஜோலார்பேட்டை சோமநாயக்கன்பட்டி இரயில்நிலையங்களுக்கு இடையில் கடவு எண்.91க்கு பதிலாக சாலை மேம்பாலம் அமைத்தல் பணிக்கு இடையூறாக உள்ள குடிநீர் குழாய்களை மாற்றி அமைத்தல் பணிக்கான தொகை ரூ.10.00 இலட்சம் (காசோலை எண்.244582 நாள்.29/03/2023 ல் நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு** :

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.733/2023/இ1

10) ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.12 மசூதி பின்தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மோட்டாருடன் குழாய் அமைப்பானது சாலை போக்குவரத்தின் காரணமாக உடைந்து ஆழ்துளை கிணற்றினுள் விழுந்துவிடுவதால் அதனை தவிர்க்கும் பொருட்டு ஆழ்துளை கிணறு உள்ள இடத்தினை சுற்றி சிமெண்ட் காங்கிரிட்டினால் ஆன தொட்டி அமைத்தும் மேல்பகுதியை கருங்கல் பலகை கொண்டு மூட தயார்செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2020/2022/இ1

11) ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.03 திருப்பத்தூர் வாணியம்பாடி மெயின் ரோடு முனிஸ்வரன் கோயில் அருகில் உள்ள சாலையானது புதியதாக அமைக்கப்ட்ட தேசிய நெடுஞ்சாலையின் தார்தளம் மேல் மட்டத்தில் இருந்து 2 அடி உயரத்தில் இருப்பதால் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமாக உள்ளது என அளித்த புகாரின் அடிப்படையில் நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களுடன் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடத்தில் நகராட்சியால் அமைக்கப்பட்ட சிறுபாலத்தின் மேல் RCC Slab மற்றும் சுவர் பகுதியை இடித்து விட்டு, 30 மீ நீளத்திற்கு சாலையினை தார்சாலை மட்டதிற்கு சமன்செய்து. அப்பகுதியில் கழிவுநீர் செல்லும் வகையில் RCC HUME Pipeகள் பொருத்தும் பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2020/2022/இ1

12) ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.13 பகுதியில் உள்ள பொதுகிணறு பழுதடைந்து உள்ளதால் அப்பகுதி மக்களின் பாதுகாக்க வேண்டும் என தெரிவித்து புகார் வரப்பெற்றதை தொடர்ந்து நகரமன்ற உறுப்பினருடன் நகராட்சி ஆணையாளர் களஆய்வு செய்யப்பட்டதில் இக்கிணற்றின் தடுப்பு சுவற்றினை பழுதுபார்த்து கிணற்றின்மேல் MS கீரில்வுடன் கூடிய மூடி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.30,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2020/2022/இ1

13) ஜோலார்பேட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள 1607 தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கவும் புதியதாக LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. நகராட்சி நகரமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய வார்டுகளில் பழுதடைந்துள்ள தெருவிளக்குகளை மாற்றி அமைக்க தெரிவித்ததின் அடிப்படையில் பழுதடைந்த தெருவிளக்கு உதிரிபாகங்கள் புதியதாக மாற்றி அமைக்க கற்பகம் கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்கிடவும் அதற்கான செலவினத் தொகை ரூ.90,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்காலம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.2020/2022/இ1</u>

14) ஜோலார்பேட்டை நகராட்சியின் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கிவரும் 60 hp 2 எண்கள் மின்மோட்டார் காயில் பழுதடைந்துள்ளதாக வந்த தகவலை தொடர்ந்து களஆய்வு செய்யப்பட்டதில் பழுது உறுதி செய்யப்பட்டது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பழுதினை சரிசெய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.50,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.403-1/2023/இ1</u>

15) ஜோலார்பேட்டை நகராட்சியின் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கிவரும் 50 hp மின்மோட்டார் இயங்க வில்லை என்ற வந்த தகவலை தொடர்ந்து களஆய்வு செய்யப்பட்டதில் பழுது உறுதி செய்யப்பட்டது. காயில் பழுது மற்றும் சாப்ட் ரிசெட் செய்வதற்கு கோயம்பத்தூர் எடுத்து சென்று சரிசெய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனவே, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பழுதினை சரிசெய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.50,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.403-2/2023/இ1</u>

16) ஜோலார்பேட்டை நகராட்சியின் சோலையூர் நீர் உந்து நிலையத்தில் இயங்கிவரும் 25hp mono Block motor 7.50 hp mono Block motor மின்மோட்டார்கள் அதிக மின் அழுத்தம் காரணமாக இயங்க வில்லை என்று வந்த தகவலை தொடர்ந்து களஆய்வு செய்யப்பட்டதில் பழுது உறுதி செய்யப்பட்டது. காயில் பழுது இரண்டு மோட்டார்களை சரிசெய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனவே, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பழுதினை சரிசெய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.50,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.403-3/2023/இ1</u>

17) ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.16 அண்ணா தெருவில் சர்வே எண்.109/8ஏ (ப) 190/8பி மற்றும் 109/9ல் அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு ம.ப./வ.(வ.ஆ) எண்.98/87ல் சுமார் 393.24 ச.மீ பூங்கா அமைக்க நமக்கு நாமே திட்டம் 2022-2023ஆம் ஆண்டு நிதியின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசின் பங்கு தொகை ரூ.6.67 + பொதுமக்கள் பங்கு தொகை ரூ.3.33) சிறுவர் பூங்கா அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.3514/2021/பி2 நாள்.17.02.2023அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 08.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின்ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.16 அண்ணா தெரு பகுதியில் சர்வே எண்.**109/ 9A1A1**ல் புதியதாக பூங்கா அமைத்தல் பணி. | 10,00 | திருமதி.எம்.மாலதி 1.08 % மதிப்பீட்டை விட அதிகம். |
| | | | திரு.எம்சங்கர் 0.15 % மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள .ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசரம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க,எண்.2029/2022/இ1

18) ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.18 காமராஜர் தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி. நமக்கு நாமே திட்டம் 2022-2023ஆம் ஆண்டு நிதியின் கீழ் ரூ.3.22 இலட்சம் மதிப்பீட்டில் (அரசின் பங்கு தொகை ரூ.2.15 + பொதுமக்கள் பங்கு தொகை ரூ.1.07) மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.3514/2021/பி2 நாள்.16.03.2023அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 11.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின்ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.18 காமராஜர் தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி. | 3.22 | திருமதி.எம்.மாலதி 0.70 % மதிப்பீட்டை விட அதிகம். |
| | | | M/S. விக்ரம் எண்டர் பிரைசஸ் 0.20 % மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள .ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க,எண்.2029/2022/இ1

19) ஜோலார்பேட்டை நகராட்சி திருப்பத்தூர் வாணியம்பாடி மெயின் ரோடு தேசிய நெடுஞ்சாலை அகலப்படுத்தி விரிவாக்க பணிகள் நடைபெறுவதால் கோடியூர் OHTல் இருந்தது குடிநீர் விநியோகிக்கும் பைப்லைன் சேதமடைந்து வார்டு எண்.03 முனிசாமி தெரு சந்திப்பிலிருந்து பாரி ஆலோ பிளாக் கம்பனி வரை (மேற்கு புறம்0 உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக்க இயலவில்லை எனவே, கோடியூர் OHTயில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பைப்லைனில் ஏற்பட்டிருக்கும் பழுதுகளை சரிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.50,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.403-3/2023/இ1</u>

20) ஜோலார்பேட்டை நகராட்சிக்கு CFG 2022 -2023 1st ECM திட்டத்தின் கீழ் சோலையூர் நீர் உந்தும் நிலையத்தில் இருந்து 9 எண்கள் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு செல்லும் குழாய் அமைப்புகளை மாற்றி புதியதாக DI பைப்புகள் அமைத்தல், அம்பலூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இருந்து நகருக்கு வரும் 300 AC Pipe யை 800 மீட்டர் நீளத்திற்கு மாற்றவும் (கேத்தாண்டபட்டி அருகில்) மற்றும் 300 வீட்டு குடிநீர் இணைப்புகள் கொடுக்கவும் மதிப்பீடு ரூ.395.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலக கடித ந.க.எண்.29404/2022/SS2 நாள்.20.03.2023 வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் பதிவு செய்யலாம்.

<u>ந.க.எண்.1609/2022/இ1</u>

21) ஜோலார்பேட்டை நகராட்சியில் அம்ருட் 2.0 திட்டம் 2022-2023ஆம் ஆண்டு நிதியில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசாணை எண்.07 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை (இணைப்பு –I &II) நாள்.20.01.2023ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26467/2021/AMRUT-1 நாள்.30.01.2023ல் வழங்கப்பட்டதை தொடர்ந்து இப்பணிக்கு 03.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(Rs in crore)**

| SL. No | Name of the work | Approved Project Cost | Fund sharing pattern | | |
|---|---|---|---|---|---|
| | | | GoI Share | GoTN Share | ULB Share |
| 1 | Park at Mettuchakkara kuppam., ward no.03, S.F.No.50/1,, 2A(p), 4A(p), and51/3 | 0.31 | 0.07 | 0.09 | 0.15 |
| 2 | Water body at Mettuchakkara kuppam, ward No.03 survey No.85/1 | 0.16 | 0.08 | 0.05 | 0.03 |

**<u>பணியின் விவரம் பின்வருமாறு</u>**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.04 மேட்டுசக்கர குப்பம் பகுதியில் சர்வே எண்.**50/1,2A(P). 4A(P)& 51/3**ல் புதியதாக பூங்கா அமைத்தல் பணி செய்தல். | 31.00 | திரு.எம்சங்கர் 0.15 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/S.D.D.எண்டர்பிரைஸ், 0.13 % மதிப்பீட்டை விட குறைவு . |

| | | | |
|---|---|---|---|
| 2. | நகராட்சியின் வார்டு எண்.03 சர்வே எண்.85/1ல் மேட்டுசக்கர குப்பம் பகுதியில் உள்ள குளத்தினை புனரமைக்கும் பணி- | 16.00 | திரு.எம்சங்கர் 0.43% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/S.D.D.எண்டர்பிரைஸ், ,0.48 % மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலக குறிப்பு** :

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் 17.03.2023 அன்று முன்அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தில் நகராட்சி பங்கு தொகையினை வருவாய் 2023-2024ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.2846/2022/இ1</u>

**22)** ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண்.14 பகுதி தூள்சாமியார் தெரு, பாபுராவ் தெரு, படவேட்டன் தெரு பகுதிகளுக்கு காந்தி ரோட்டில் ஆழ்துளை கிணற்றில் இருந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி, இரண்டு மேடை அமைத்து 1000லிட்டர் HDPE அமைத்து தயார் செய்ய மதிப்பீடு ரூ.30,000/ க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்குண்டான செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதி 2023-2024:ல் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்.

<u>ந.க.எண்.2020/2022/இ1</u>

**23)** ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண்.12 காவல் நிலைய சாலையில் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.46.00 இலட்சம் ஆகும். இதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11919/2022/CFC, நாள்: 07.03.2023 15வது நிதிகுழு மான்யம் Un-Tied Grant 2022-23ஆம் ஆண்டிற்கான நிதியில் இருந்து இப்பணிக்கு தொகை ரூ.37.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பணி மேற்கொள்ள நகராட்சியின் பங்கு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி அளித்து வரப்பெற்றதை தொடர்ந்து இச்சாலையின் மண்ணின் CBR-Value மற்றும் சாலை வடிவமைப்பு (Design) முதலியவற்றை அரசு பொறியியல் கல்லூரி மூலம் ஆய்வு செய்து அறிகை பெற்று அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்ய மண்டல செயற்பொறியாளர், வேலூர் அறிவுறுத்தியதின்படி தருமபுரி அரசு பொறியியல் கல்லூரி, வல்லுநர்களை கொண்டு மேற்படி பரிசோதனை செய்வதற்கான கருவிகள் கொண்டுவந்து திரும்ப கொண்டு சென்றதற்குண்டான செலவினம் ரூ.47,000/ க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்குண்டான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி 2023-2024:ல் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்.

<u>ந.க.எண்.1609/2022/இ1</u>

**24)** ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.8 காந்திரோடு குறுக்கு தெரு (மருத்துவர் காலணி) காந்தி ரோடு, KKC நகர், பழைய நகராட்சி அருகில், திருவள்ளுவர் தெரு, ஈ.வே.ரா. தெருக்களில் பழுதடைந்துள்ள கால்வாய், சிறுபாலம் பராமரிப்பு பணிகள் மற்றும் sintex மேடை சரிசெய்தல் பணிக்கு 13.04.2023 வ.எண்.1 மற்றும் வ.எண்.2ல் வநகராட்சி பகுதிகளில் உள்ள நீர் உந்தும் குழாய்கள், குடிநீர் பகிர்மானக் குழாய்களில் பொருத்தப்பட்ட வால்வுகளில் பழுதுதடைந்துள்ளதை புதியதாக வால்வுகளை பொருத்துதல் பணிக்கு. 21.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின்ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.8 காந்திரோடு குறுக்கு தெரு (மருத்துவர் காலணி) காந்தி ரோடு, KKC நகர், பழைய நகராட்சி அருகில், திருவள்ளுவர் தெரு, ஈ.வே.ரா. தெருக்களில் பழுதடைந்துள்ள கால்வாய், சிறுபாலம் பராமரிப்பு பணிகள் மற்றும் sintex மேடை சரிசெய்தல். | 2.00 | திரு.S.B.குமரவேல், 0.22 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/S. விக்ரம் எண்டர் பிரைசஸ் 0.37 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | ஜோலார்பேட்டை நகராட்சியில் உள்ள நீர் உந்தும் குழாய்கள், குடிநீர் பகிர்மானக் குழாய்களில் பொருத்தப்பட்ட வால்வுகளில் பழுதுதடைந்துள்ளதை புதியதாக வால்வுகளை பொருத்துதல் மற்றும் பணி மேற்கொள்ளுதல் | 3.00 | M/S. A M கண்ஸ்ட்ரக்சன்ஸ் 0.33 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.எம்.மாலதி 0.80 % மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள .ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க,எண்.2020/2023/இ1

**25)** ஜோலார்பேட்டை நகராட்சி பொறியியல் பிரிவின் அத்தியாவசிய பணிகளான குடிநீர் பணிகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள், தலைமை நீரேற்று நிலை பணிகள் மேற்கொள்வதற்கு நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் பணியின் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதத்தின்படி ஆறு மாதகாலத்திற்கு 19 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ளும் பணியினை மேற்கொள்ள 31.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார்செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | நகராட்சியில் பொறியியல் பிரிவின் அத்தியாவசிய பணிகளான குடிநீர், தெருவிளக்கு, தலைமை நீரேற்று நிலைய பணிகள் மேற்கொள்ள ஆட்களை சப்ளை செய்யும் பணி. | 9.60 | திருமதி.எம்.மாலதி 0.06 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/S. விக்ரம் எண்டர் பிரைசஸ் 0.10 % மதிப்பீட்டை விட அதிகம். |

அலுவலக குறிப்பு.

1. 31.03.2022 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் வழங்கியுள்ள திருமதிM.மாலதி,ஜோலார்பேட்டை ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்
3. மேற்படி பணிக்கு செலவினத் தொகையை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>ந.க.எண்.377/2023/இ1</u>

**26)** ஜோலார்பேட்டை நகராட்சி, நச்சுத்தொட்டி கழிவுகள் (Septage management) வெளியேற்றுவது தொடர்பாக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து அரசாணை எண்.1 நாள்.02.01.2023ல் குறிப்பிட்டுள்ளபடி இனிவரும் காலங்களில் நடவடிக்கை மேறகொள்ள வேண்டும்மென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நச்சுத்தொட்டி கழிவுகள் (Septage management) வெளியேற்றுவது தொடர்பாக வரப்பெற்ற அரசாணை எண்.G.O.(Ms).No.1 Municipal Admininstration and water supply (MW) Department நாள்.02.01.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மேற்படி அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.

<u>ந.க.எண்.157/2023/இ1</u>

**27)** ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண்.1 முதல் 18 வார்டுகளில் சாலைப்பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் விடுப்பட்ட கீழ்கண்ட விவரப்படியான மண்சாலைகளை நகராட்சியின் சாலைப்பதிவேட்டில் பதிவேற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | தெருவின் பெயர் | சர்வே எண். | வ. எண். | வார்டு எண். | தெருவின் பெயர் | சர்வே எண். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 06 | குடியான குப்பம் | 289/1A | 17 | 11 | நேத்தாஜி ரோடு | |
| 2 | | குடியான குப்பம் | 267/1 | 18 | | சக்கரகுப்பம் காலனி குறுக்கு தெரு | |
| 3 | | குடியான குப்பம் | 283/5A | 19 | | வேலு செட்டி 2வது குறுக்கு தெரு | |
| 4 | | குடியான குப்பம் | 280/2A | 20 | | கேசவ ரெட்டி குறுக்கு தெரு | |
| 5 | | குடியான குப்பம் (நந்தினி நகர்) | 300/1A2 | 21 | 14 | காலியப்பன் குறுக்கு தெரு | |
| 6 | 02 | புதூர் மேற்கு தெரு | 14/1 A | 22 | 15 | அனிபிரான் வட்டம் நியு தெரு | |
| 7 | | புதூர் மேற்கு தெரு | 13/3C2 | 23 | 12 | மசூதி பின் தெரு | |
| 8 | | புதூர் மேற்கு 3வது தெரு | | 24 | 04 | பாபுநகர் 2வது குறுக்கு தெரு | |
| 9 | 03 | மேட்டுசக்கர குப்பம் | 50/1 | 25 | | ராகவேந்திரா கோயில் தெரு | |
| 10 | 01 | பொட்டிகான் பள்ளம் | 68/2 | 26 | | ஜெயமாதா நகர் 5வது தெரு | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | 07 | அசோக் நகர் | 106/10 | 27 | | அப்போஜி நியு தெரு | |
| 12 | | ஸ்ரீ ராம் நகர் | | 28 | | பார்சம்பேட்டை நியு தெரு | |
| 13 | | ஸ்ரீ ராம் நகர் பூங்கா தெரு | | 29 | 18 | அம்பேத்கார் நியு தெரு | |
| 14 | 10 | வெப்பாளமரத்து தெரு | 32/4A | 30 | | காமராஜர் கடைசி தெரு | |
| 15 | | சொரங்கன் வட்டம் | | 31 | | அரியா கவுண்டர் கடைசி தெரு | |
| 16 | 16 | சமத்சாயுபு 4வது குறுக்கு தெரு | | 32 | | திருப்பதி சாமி தெரு | |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சியின் சாலைப்பதிவேட்டில் பதிவேற்றம் செய்ய மன்றம் அனுமதிக்காலம்.

ந.க.எண். 769/2023/இ1

நகரமன்ற தலைவர்

ஜோலார்பேட்டை நகராட்சி

## ஜோலார்பேட்டை நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

2023-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி (28.04.2023) வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற சாதாரணக் கூட்ட தீர்மானங்கள்.

| வ. எண். | பொருள் எண். | தீர்மான எண். | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 2 | மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 3 | மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 4 | மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 5 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 6 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 7 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 8 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 9 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 10 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 11 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 12 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 13 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | 13 | 14 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 14 | 14 | 15 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 15 | 15 | 16 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 16 | 16 | 17 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | 17 | 18 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 18 | 18 | 19 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 19 | 19 | 20 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 20 | 20 | 21 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 21 | 21 | 22 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 22 | 22 | 23 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 23 | 23 | 24 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 24 | 24 | 25 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 25 | 25 | 26 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 26 | 26 | 27 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 27 | 27 | 28 | அலுவலக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

(ஓம்)/-மா.காவியா
நகராமன்ற தலைவர்

/உண்மை நகல்/

நகராட்சி ஆணையாளர்
ஜோலார்பேட்டை நரகாட்சி